18.09.2024

O.S.No.345/2010

வா.சா.3.திரு.மூர்த்தி த.பெ.அய்யாவு

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**1, 2 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. **நான் இந்த வழக்கின் 2ம் வாதி என்றால் சரிதான். எனது தகப்பனார் அய்யாவு என்பவரது தகப்பனார் பெயர் நா.மொக்க இளங்கான். எனது தகப்பனார் மொ.அய்யாவு என்று கையெழுத்திடுவார் என்றால் சரிதான். நான் எந்த ஆண்டு இறந்தேன் என்றால் 1978ம் ஆண்டு பிறந்தேன். இந்த வழக்கானது முனியாண்டி கோவில், நொண்டிச்சாமி கோவில், அய்யனார் கோவில், கருப்பணசாமி கோவில் மற்றும் மந்தையம்மன் கோவில் மரியாதை சம்பந்தமான வழக்கு என்றால் சரிதான். எனக்கு விவரம் தெரிந்து எத்தனை ஆண்டுகள் மேற்சொன்ன கோவில்களில் நான் திருவிழா பார்த்துள்ளேன் என்றால் 1982ம் ஆண்டு மட்டும் திருவிழா நடைபெற்றது எனக்கு தெரியும். அந்த சமயம் எனக்கு சுமார் 4 வயது இருக்கும் என்றால் சரிதான். அந்த திருவிழா சமயத்தில் யார் யாருக்கு என்னென்ன மரியாதை கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் நான் ரிக்கார்டில் யார் யாருக்கு என்னென்ன மரியாதை கொடுத்துள்ளார்கள் என்று பார்த்துள்ளேன்.**

2. **மேற்சொன்ன கோவில்களில் முதலில் எந்த கோவிலுக்கு திருவிழா நடத்தப்படும் என்ற விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் நான் ரிக்கார்டில்தான் படித்துள்ளேன். மேற்சொன்ன 5 கோவில்களிலும் ஊர் வழக்குப்படி திருவிழா நடத்துவதில் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளை கணக்கு ஒப்படைக்க சொல்லி பரிகாரம் எதுவும் நான் கேட்கவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன கோவில்களுக்கு மொத்தம் 6 மரியாதைகாரர்கள் உண்டு என்றால் சரிதான். அதில் 5 மரியாதைகாரர்கள் மேற்சொன்ன கோவில்களுக்கு நிர்வாக பொறுப்பாளர்கள் என்றால் சரிதான். அந்த 5 மரியாதைகாரர்களும் கூட்டாக இணைந்து நிர்வாகம் பார்ப்பதுதான் உரிமை உள்ளது என்றால் சரிதான், ஆனால் 1, 2 மரியாதைகாரர்கள் கணக்கு வழக்குகளை நிர்வகித்து வருகீறார்கள். இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.186/1968 வழக்கில் இதே தாவா கோவில் சம்பந்தமாக அதில்**

கிடைக்கக்கூடிய மரியாதை மற்றும் நிர்வாகம் பொறுத்து ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு வழக்கு எண்.40/1971 தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

3. அந்த தீர்ப்பில் என்ன கூறப்பட்டுள்ளது என்றால் தாவா கோவில் சம்பந்தமாக 1 முதல் 5 மரியாதைகாரர்களுக்கு மட்டும தான் நிர்வாக பொறுப்பு உள்ளது எனவும், 6வதுமரியாதைகாரர்களுக்கு எந்த நிர்வாக பொறுப்பும் இல்லை எனவும், மரியாதை மட்டும் அவர்கள் பெற தகுதி படைத்தவர்கள் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அந்த மேல்முறையீட்டு தீர்ப்பாணையை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பில் 1 முதல் 5 மரியாதைகாரர்கள் கூட்டாக தாவா கோவில்களில் நிர்வாகம் பார்க்க வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3ம்மரியாதை சம்பந்தமாக அந்த கரைகாரர்களிடையே பிரச்சினை உள்ளது என்றால் சரிதான். அந்த பிரச்சினை 1982 முதல் இருந்து வருகிறது. 3வது மரியாதை சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருவதாலும், 5 மரியாதைகாரர்களும் கூட்டாக தாவா கோவில்களில் நிர்வாகம் பார்க்க வேண்டி உள்ளதாலும், 3ம் மரியாதை சம்பந்தமாக பிரச்சினை தீரும் வரையில் 5 மரியாதைகாரர்களும் சேர்ந்து தாவா கோவிலை நிர்வகித்து திருவிழா நடத்துவதற்கு சாத்தியம் இல்லை என்றால் சரியல்ல.

4. 2016 மற்றும் 2017ம் ஆண்டு கால கட்டங்களில் தாவா கோவில்களுக்கு மேற்படி 5 மரியாதைகாரர்கள் இல்லாமல் வட்டாட்சியர் முன்னிலையில் ஏற்பட்ட அமைதி பேச்சுவார்த்தையி்ன அடிப்படையில் ஊர் இளைஞர்களாக சேர்ந்து திருவிழா நடத்தினார்கள் என்றால் சரிதான். கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அவ்வாறு கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு எனது தரப்பில் நான் ஆட்சேபணை தெரிவித்தேனா என்றால் ஆட்சேபணை செய்தோம், நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் எந்த மரியாதைகாரர்களுக்கும் கோவிலில் மரியாதை கொடுக்காமல் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு அனுமதி அளித்ததன் பேரில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அந்த ஆண்டுக்கு மட்டும் அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது என்றால் சரிதான். 1 முதல் 6 மரியாதைகாரர்களும், தாவா கோவில்களில் கூட்டாக இணைந்து திருவிழா நடத்துவதற்கு தயாராக உள்ளார்கள் என்றாலும், இந்த வழக்கு அவசியமற்ற

வழக்கு என்றாலும் சரியல்ல. 3ம் மரியாதை சம்பந்தமாக இந்த வழக்கில் எந்த தீர்வும் எட்ட முடியாது என்றால் சரியல்ல.

5. அசல் வழக்கு எண்.186/1968 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் படியும், அதன் மீது ஏற்பட்ட மேல்முறையீட்டு தீர்ப்பின் படியும் 1, 2 பிரதிவாதிகள் நடந்து கொள்வதற்கு தயாராக உள்ளார்கள். 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா கோவில்களின் வருமானங்களை பொறுத்து மதுரை 3வது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழகககு எண்.632/1987 வழகககு தாக்கல் செய்து, 26.03.1991 தேதியில் சமரச தீர்வு ஏற்பட்டு, அந்த சமரச தீர்வின் படி நீதிமன்ற ஆணையர் நியமித்து தாவா கோவில்களில் புனரமைக்க கோரும் கோரிக்கை நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

**<u>3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு</u>** <u>விசாரணை</u>

1. இந்த வழக்கு கிராமத்தார்கள் சார்பாக நாங்கள் தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். கிராமத்தார்கள் சார்பாக எங்களை வழக்கு நடத்த அனுமதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் நான் 1ம் மரியாதைகாரர் என்ற அடிப்படையில் எங்களை ஒதுக்கிவிட்டு திருவிழா நடத்த முற்பட்டதால் நாங்கள் இந்த வழக்கினை தாக்கல் செய்தோம். கிராமத்தின் சார்பாக இந்த வழக்கினை தாக்கல் செய்தவற்கு எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. கிராமத்தின் சார்பாக இந்த பிரதிநிதித்துவ வழக்கினை தாக்கல் செய்துள்ளதாக சொல்வதால் அது சம்பந்தமாக நாளிதழில் அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. அவ்வாறு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், அந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எங்களுக்கு அருகதை இல்லை என்றாலும் சரியல்ல.

2. தாவா கோவில்களில் 6 மரியாதை வழங்கப்பட்டு வருகீறது என்றால் சரிதான். இந்த 6 மரியாதைகளில் முதல் மரியாதை நாட்டாமை மரியாதை என்று அழைக்கப்படும் என்றால் சரிதான். 2வது மரியாதை தண்டல் மரியாதை என்றும், 3ம் மரியாதை பெரிய சம்சாரி (பெரிய விவசாயி) மரியாதை என்றும், 4ம்மரியாதை ஊர்காவல்காரன் மரியாதை என்றும், 5ம் மரியாதை கோனார் மரியாதை என்றும், 6ம் மரியாதை ஹரிஜன் மரியாதை

என்றும் அழைக்கப்படுகிறது என்றால் சரிதான். கால காலமாக தாவா கோவில்களில் மேற்கூறிய வரிசையில் திருவிழாவின் போது கோவில் மரியாதை வழங்கப்பட்டு வந்தது என்றால் சரிதான், 1982ம் ஆண்டு வரை மேற்கூறியவாறு கோவில்திருவிழா நடைபெற்று மரியாதை கொடுக்கப்பட்டு வந்தது, அதன்பின்பு தற்போது வரை தாவா கோவில்களில் திருவிழா நடைபெறவில்லை.

3. வருடா வருடம் ஆவணி மாதத்தில் முதன்முதலில் நொண்டிச்சாமிக்கும், முனியாண்டி சாமிக்கும் திருவிழா நடத்துவது வழக்கமாக இருந்தது என்றால் சரிதான். மேற்கூறிய 2 சாமிகளுக்கான திருவிழா 6வது மரியாதைகாரர்கள் நடத்துவார்கள் என்றால் சரிதான். அந்த திருவிழாவிற்கான பணம் 1, 2 மரியாதைகாரர்களால் கிராம பணத்தினை 6ம் மரியாதைகாரகள் கொடுத்து இந்த திருவிழா நடைபெறும் என்றால் சரிதான். கிராம பணத்தினை 1வது மரியாதைகாரரான நாட்டாமை வகையறாதான் நிர்வகிப்பார்கள் என்றால் சரிதான். கிராம கணக்கு வழக்குகளை 2ம் மரியாதைகாரர்கள் எழுதி வைப்பார்கள் என்றால் சரிதான். அதற்கு அடுத்த வருடம் 2ம் மரியாதைகாரரான தண்டல் வகையறா நாட்டாமை வகையறாவாகவும், முதல் மரியாதை காரரான நாட்டாமை வகையறா தண்டல் வகையறாவாகவும் செயல்படுவார்கள் என்றால் சரியல்ல. நாட்டாமை வகையறா தண்டல் வகையறாவாகவும், தண்டல் வகையறா நாட்டாமை வகையறாவாகவும் ஆணடுக்கொரு முறை மாறுவார்கள் என்றாலும், இதை ஒப்புக்கொண்டால் எனது வழக்கிற்கு பாதகமாக போய்விடும் என்பதால் நான் மறுத்து பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. ஆவணிக்கு அடுத்து புரட்டாசி மாதம் அய்யனார் கோவிலுக்கும், கருப்பசாமி கோவிலுக்கும் திருவிழா நடைபெறும் என்றால் சரியல்ல, புரட்டாசி மாதம் அம்மனுக்கு மட்டும் தான் திருவிழா நடைபெறும்.

4. நாங்கள் தாக்கல் செய்துள்ள பிராதினை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது பிராதில் புரட்டாசி மாதம் அய்யனார் கோவிலுக்கும், கருப்பசாமி கோவிலுக்கும் திருவிழா நடைபெறும் என்று நான் சொல்லிவிட்டு, தற்போது அதற்கு நேர்மாறாக மறுத்து சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**1. நீதிமன்ற கேள்வி?** - எங்கள் சார்பாக இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 1ம் மரியாதைகாரர்களாகிய எங்களை மட்டும் விட்டுவிட்டு மற்ற மரியாதைகாரர்கள் அனைவரும் தாவா கோவில்களில் திருவிழா நடத்த முற்பட்டதால் இந்த வழக்கினை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம்.

**2. நீதிமன்ற கேள்வி?** - தற்போது இந்த வழக்கில் எங்களுக்கு என்ன பரிகாரம் வேண்டும் என்றால் தாவா கோவில்களில் திருவிழா சமயத்தில் எங்களுக்கு மூப்பு மரியாதை கொடுப்பது வழக்கம், அதை கொடுக்காமலும், மற்ற சடங்கு சம்பிரதாயங்களில் எங்களுக்கு முன்னுரிமை கொடுக்காமலும், திருவிழா நடத்த முயற்சி செய்கிறார்கள் என்பதால் இந்த வழககினை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம்.

**3. நீதிமன்ற கேள்வி?** - என்ன வகையான மரியாதை என்றால் திருவிழாவில் பொங்கல், விபூதி, சந்தனம், வாழைப்பழம், தேங்காய் ஆகியவற்றினை எங்களுக்கு மூத்த வாரிசு என்ற அடிப்படையில் மூப்பு மரியாதை வழங்கப்படும், அதை தர மறுக்கிறார்கள்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.